Transport for NSW

# Community Transport

Tamil

NSW மாநிலப் போக்குவரத்து

# சமூகப் போக்குவரத்து

## அருகாமையிலுள்ள இடங்களுக்கு நீங்கள் சுதந்திரமாகச் சென்று வரவும், வாழ்க்கையை முழுமையாக வாழவும் உங்களுக்கு உதவும் பாதுகாப்பான வீட்டுக்கு வீடு வரும் போக்குவரத்து வசதி



**யாரையும் சார்ந்திராமல் இருக்கின்றேன்; மற்றவர்களுடன் தொடர்பில் இருக்கின்றேன்; மற்றும் ஆதரவுதவியோடு இருக்கின்றேன் என்ற உணர்வில் இருங்கள்.**

## செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்வது உங்களுக்குக் கடினமாக இருக்கிறதா? நீங்கள் தனித்துவிட்டதாக நினைக்கிறீர்களா? உங்களுடைய சுதந்திரத்தைப் பராமரித்து உங்களுடைய சமூக வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்களா?

அருகாமையிலுள்ள இடங்களுக்கு இலகுவாகச் சென்று வரவும், சமூகத்தினரோடு தொடர்பில் இருக்கவும் உங்களுக்கு உதவி செய்து, மகிழ்ச்சியும், ஆரோக்கியமும், மன நிறைவும் மிக்கதொரு வாழ்க்கையை வாழ ஏது செய்யும் அரசாங்க நிதியுதவியளிக்கப்பட்ட சேவையே ‘சமூகப் போக்குவரத்து’ என்பதாகும்.

மருத்துவ சந்திப்புவேளைகளுக்குச் செல்ல, சமூக நடவடிக்கைகளில் கலந்துகொள்ள, கடைகளுக்குப் போகும் தேவைகளைப் பூர்த்தி செய்ய மற்றும் வீட்டில் மற்றவர்களது ஒத்தாசை இல்லாத வாழ்க்கையைப் பராமரித்து வர உங்களுக்கு உதவும் வகையில் இந்த சேவை பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ‘சமூகப் போகுவரத்’தினால் அளிக்கப்படும் சேவைகள் யாவை?

‘சமூகப் போகுவரத்’தினால் பல வகையான சேவைகள் வழங்கப்படுகின்றன, இருப்பினும், சேவை வழங்குநர்களுக்கிடையே இவை மாறுபடும். உங்களுடைய உள்ளூர்ப் பகுதியில் கிடைக்கும் சேவைகள் உங்களுடைய குறிப்பான தேவைகளுக்குப் பொருந்துமா என்று தெரிந்துகொள்ள உங்கள் பகுதியில் உள்ள சேவை வழங்குநர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.

- நீங்கள் செல்லவேண்டிய இடத்திற்கு போவதற்கும் அங்கிருந்து வருவதற்குமான வீட்டுக்கு வீடு வரும் போக்குவரத்து வசதி
- உங்களுடைய தேவைகளுக்கேற்ற நேரங்களில் உங்களை அழைத்துச் செல்லும் வசதி
- சக்கரநாற்காலிகள் மற்றும் குறிப்பான இயங்கு தேவைகள் உள்ளோருக்குப் பொருத்தமான வாகனங்கள்
- சிறு குழுக்களாக உள்ளவர்களுக்கு இடவசதி உள்ள வாகனங்கள்
- வாகனத்திற்கு அழைத்து வரவும் வாகனத்திலிருந்து அழைத்துச் செல்லவும் உங்களுக்கு உதவுவதில் பயிற்சி பெற்ற ஓட்டுனர்கள்
- நீங்கள் வாங்கிய பொருட்களை வீட்டுக்கு எடுத்துசெல்வதில் உங்களுக்கு உதவக்கூடிய உதவியாளர்கள்
- மொழித் தேவைகளில் உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய பன்மொழிப் பணியாளர்கள் அல்லது மூலவளங்கள்



## ‘சமூகப் போக்குவரத்து’ வசதிகளை யாரெல்லாம் பயன்படுத்தலாம்?

குறைவான போக்குவரத்து வசதிகள் உள்ளவர்களுக்கும் குறிப்பிட்ட சில தகுதித்தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கும் ‘சமூகப் போக்குவரத்து’ வசதிகள் கிடைக்கக்கூடும்.

**பின் வரும் தருணங்களில் நீங்கள் தகுதி பெறக்கூடும்.**

- நீங்கள் வயோதிபராகவும் குறைந்த உடலியக்கத் திறன் உள்ளவராகவும் இருந்தால்
- உடலியக்கத் திறனை மட்டுப்படுத்தும் அல்லது உடல்நலப் பிரச்சினைகள் உங்களுக்கு இருந்தால்
- போக்குவரத்து வதிகளை அணுகத் தேவைப்படும் மொழித் திறன் உங்களுக்குக் குறைவாக இருந்தால்
- நீங்கள் பொதுப் போக்குவரத்து வசதிகள் குறைந்த அல்லது இல்லாத இடத்தில் வசிப்பவர் மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளை உங்களால் அணுக இயலாமலிருந்தால்
- போக்குவரத்து வசதிகளை அணுகுவதில் மற்ற கணிசமான தடைகள் உங்களுக்கு இருந்தால்

உங்களுக்கு 65 வயது ஆகியிருந்தால் (ஆபொரிஜினி பூர்வகுடி மற்றும் டோரிஸ் நீர்ச்சந்தித் தீவகத்தவருக்கு 50 வயது), ஒரு தகைமை மதிப்பீட்டிற்காகவும், உங்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள 'சமூகப் போக்குவரத்து' இயக்குனர் ஒருவரைப் பார்ப்பதற்கான பரிந்துரை வேண்டவும் 1800 200 422 எனும் இலக்கத்தில் **My Aged Care** -ஐ அழையுங்கள். நீங்கள் இந்த வயதினரைச் சாராதவராக இருந்தால், மேலதிகத் தகவல்களுக்கு உங்களுடைய உள்ளூர் சேவை வழங்குநருடன் தொடர்புகொள்ளுங்கள்.

'சமூகப் போக்குவரத்து' சேவைகளுக்குத் தகுதி பெறாதவர்கள் **First Stop Travel Training (முதல் நிறுத்த பயணப் பயிற்சி)** எனப்படும் சேவை மூலவளத்தைக் கருத்தில் கொள்ளலாம், இது அவர்களுக்குப் பயனளிப்பதாக இருக்கக்கூடும். அருகில் உள்ள இடங்களுக்கு எளிதில் சென்று வரவும் சமூகத்தில் இன்னும் அதியளவில் பங்குபற்றவும் இயலுமாயிருக்கும் வகையில் பாதுகாப்பாகவும், தனியாகவும் பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்துவது எப்படி என்று இந்த இலவச சேவை மக்களுக்குக் கற்றுக்கொடுக்கும்.

மேலதிகத் தகவல்களுக்குச் செல்க:
**firststop.transportnsw.info**

## 'சமூகப் போக்குவரத்து' சேவைக்கு எவ்வளவு செலவாகும்?

கிடைக்கக்கூடிய மூலவள வசதிகள், பயணியர் தேவைகள் மற்றும் ஏற்று - இறக்கு இடங்கள் ஆகியவற்றைப் பொறுத்து, சேவை வழங்குநர்கள் மற்றும் பகுதிகளுக்கிடையே செலவு வித்தியாசப்படும்.

முன்பதிவு செய்வதற்கு முன்பாக, செலவு எவ்வளவு என்று தெரிந்துகொள்ள உங்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள 'சமூகப் போக்குவரத்து' சேவை வழங்குநருடன் தொடர்புகொள்ளுங்கள்.

## உங்களுக்கு அருகாமையிலுள்ள 'சமூகப் போக்குவரத்து' வசதிகளை எவ்வாறு கண்டறிவது?

பின் வரும் படிநிலைகளைப் பின்பற்றி உங்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள சேவை வழங்குனரை நீங்கள் கண்டறியலாம்:

1. **transportnsw.info/operators** வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்
2. 'போக்குவரத்துச் சேவை வழங்குநர்கள்' (Transport Operators) எனும் தேடல் பகுதியில் உங்களுடைய புறநகர்ப் பகுதியின் பெயரை உள்ளிட்டுத் தேடுங்கள், அல்லது உங்கள் பகுதியில் கிடைக்கும் 'சமூகப் போக்குவரத்து' வசதிகளை அறிய 'mode' அல்லது 'region' எனும் வடிப்பான் (filter) களைப் பாவியுங்கள்.

   வலைத்தளம் மற்றும் தொடர்பு விபரங்கள் உள்ளடங்க, தேடல் முடிவுகளானவை அகர வரிசையில் தோன்றும்.
3. 'க்ளிக்' செய்து சேவை வழங்குநரது வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது மேலதிகத் தகவல்களுக்கு, காண்பிக்கப்படும் தொலைபேசி இலக்கத்தினை அழையுங்கள்.





M1446 - 0719